Registered as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 01 15 - 06 - 94 புதன்கிழமை ஓசை 117

## அமில மழை பெய்வதை தடுக்க ஐரோப்பிய நாடுகள் ஒப்பந்தம்

கந்தகம் வளிமண்டலத்திற்கு எட்டுவதைத் தடுத்து அதன்மூலம் அமில மழை பெய்வதைத் தடுக்கும் ஒப்பந்தம் ஒன்றில் ஐரோப்பியநாடுகளும், கனடாவும் நேற்று கையொப்பமிட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் இந்த ஒப்பந்தத்தின்மூலம் சூழல் மாசடைதலைத் தடுக்கும் ஏனைய ஒப்பந்தங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

# மக்கள் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்க தயங்காது குரல்கொடுத்துவந்த பேராசிரியர்

## இரங்கற்செய்தியில் தலைவர் பிரபாகரன்

[ யாழ்ப்பாணம் ]

"எமது மக்கள் உரிமை பெற்று வாழவேண்டும், தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் தகைமை பெற்று வாழவேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக நின்றார். அதற்காக குரல் எழுப்பவும் அவர் தயங்கவில்லை" இவ்வாறு பேராசிரியர் துரைராசா அவர்களின் மறைவையொட்டி தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியினை முழுமையாகத்தருகின்றோம்; நாம் நெஞ்சார நேசித்த ஒரு பண்பான மனிதர் எம்மை விட்டுப் போய்விட்டார். இந்த இனிய மனிதரை இழந்து, எமது தேசம் இன்று ஆறாத் துயரில் மூழ்கிப் போய்க் கிடக்கிறது.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர். நெஞ்சில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர். பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். மாண்பு. இந்த மண் எமக்குத் தந்த அறிவு ஜீவிகளில் அவர்அற்புதமானவர். அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து கொண்ட உயரிய பண்பாளர்.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய பணி போற்றத்தக்கது. நெருக்கடி மிகுந்த வரலாற்றுக் கட்டத்தில, எதிரியின் அழுத்தங்களுக்கு அசைந்து கொடாமல் அவர் கல்விக்குக் காப்பரணாக நின்றார்.

பேராசிரியர் துரைராசா



## இன்று வடமராட்சியில் இறுதியாத்திரை நிகழ்வு

(யாழ்பபாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தலை சிறந்த கல்விமானுமாகிய பேராசிரியர் துரைராசாவின் இறுதி யாத்திரை இன்று வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

பேராசிரியரது இறுதியாத்திரையையொட்டி வடமராட்சிப் பகுதி மட்டுமல்லாமல் யாழ். குடாநாடு முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது. கடந்த மூன்று நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் துக்கதினத்தையடுத்துஇன்றுபேராசிரியரது இறுதியாத்திரை நடைபெறவுள்ளது. இவ்இறுதி யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம் ... சலி உரை நிகழ்த்துவார்கள்.

இதைத் தொடர்ந்து பேராசிரியரது பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வதிரி ஆலங்கட்டை மயானத்தில் உரிய சடங்குகளுடன் தகனம் செய்யப்படவிருக்கிறது.

இன்று நடைபெறவிருக்கும் பேராசிரியரது இறுதியாத்திரைக்காக இன்றைய தினம் குடாநாடெங்கும் பூரண துக்கதினமாக இருக்கும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்களும் இன்றைய தினம் மூடப்பட்டிருக்கும்.

(க)

## காமினி, ரொனி, பெரேரா இன்று அமைச்சர்களாவர்?

(கொழும்பு)

எம்.பிகளாக பதவி ஏற்றுள்ள காமினி திசாநாயக்கா, ரொனி டி மெல், காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகி ... வழங்கப்படலாம் என ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருகிறது.

ஆறாத் துயரில் மூழ்கிப் போய்க் கிடக்கிறது.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர். நெஞ்சில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர். பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான

ஆதாரமாக விளங்கும் கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய பணி போற்றத்தக்கது. நெருக்கடி மிகுந்த வரலாற்றுக் கட்டத்தில, எதிரியின் அழுத்தங்களுக்கு அசைந்து கொடாமல் அவர் கல்விக்குக் காப்பரணாக நின்றார்.

பேராசிரியர் துரைராசா

(7ஆம் பக்கம் பார்க்க)



சப் பகுதி மட்டுமல்லாமல யாழ். குடாநாடு முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது. கடந்த மூன்று நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் துக்க தினத்தையடுத்துஇன்றுபேராசிரியரது இறுதியாத்திரை நடைபெறவுள்ளது. இவ்இறுதி யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்றுகாலை 9.00 மணி முதல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் பேராசிரியரது பூதவுடலுக்கான இறுதிக்கிரியைகளும் சடங்குகளும் உரிய முறைப்படி மேற்கொள்ளப்படவிருக்கிறது. இக்கிரியைகள் நிறைவடைந்ததும் நண்பகல் அளவில் பேராசிரியரது மறைவையொட்டி. அஞ்சலிக் கூட்டம் ஒன்று அவரது இல்லத்திலேயே நடைபெறும். இக் கூட்டத்தில் பல கல்விமான்களும்பிரமுகர்களும் அஞ்

# காமினி, ரோனி, பெரேரா இன்று அமைச்சர்களாவர்?

(கொழும்பு)

எம்.பிகளாக பதவி ஏற்றுள்ள காமினி திசாநாயக்கா, ரொனி டி மெல், காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோருக்குஇன்று புதன்கிழமை அமைச்சரவைப்பொறுப்புகள் வழங்கப்படலாம் என ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருகிறது.

என்ன பொறுப்புகள் இம்

(7ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று பேராசிரியருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பிரபல கல்விமானும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் துரைராசாவுக்கு நேற்று குடாநாடு தழுவிய அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேராசிரியரின் பூதவுடல் நேற்று யாழ். குடாநாட்டின் அனேக பகுதிகளினூடாக ஊர்வலமாக எடுத்து வரப் பட்டபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் மலர்கள் தூவியும் மலர்மாலைகள் அணிவித்தும் அஞ்சலி செலுத்தினர்.

பேராசிரியரது பூதவுடல் நேற்று அதிகாலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு எடுத்து வரப்பட்டது. பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்

(7ஆம் பக்கம் பார்க்க)

# துணைப்படை வீரர் வீரச்சாவு

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள பெரியகுளம் என்னும் இடத்தில், கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினருக்கும் துணைப் படையினருக்கும் இடையில்

(7ஆம் பக்கம் பார்க்க)

# பிரதேச சபை உறுப்பினர் கத்தியால் வெட்டிக் கொலை

(கொழும்பு)

மதவாச்சி பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் கத்தியாலும் கோடரியாலும் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹேரத் முதியான்சே என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார். இவரின் கொலைதொடர்பாக ஒரு பெண்ணும் அவரின் பதின்நான்கு வயது மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 'பான்ட்' அணிவகுப்புடன் விசேட ஊர்தியில் பூதவுடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ வரைபடத்தை முகப்புத் தோற்றமாக கொண்ட விசேடமாக அமைக்கப்பட்ட ஊர்தியில் மறைந்த பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பேழை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் ஊர்தியின் முன்னால் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் ''பான்ட்'' வாத்திய அணியொன்று அணிவகுத்துச் சென்றது. அதனைத் தொடர்ந்து மலர் வளையங்களைத் தாங்கிய மாணவர்களின் அணிவகுப்பும் சென்றுகொண்டிருந்தது. இவ் ஊர்வலத்தில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் பொதுமக்களும் சென்றுகொண்டிருந்தனர்.

(7ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி அஞ்சலி செலுத்த நீண்டவரிசையில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசா அவர்களின் பூதவுடல் நேற்று அதிகாலை முதல் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைக்கப்பட்டிருந்த போது பெருமளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

பல்கலைக் கழக மாணவர்கள், ஊழியர்கள், கல்விமான்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் திரண்டு வந்து பேராசிரியருக்கு இறுதி

(7ஆம் பக்கம் பார்க்க]


# அரச, ராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி; காரைநகர் பகுதியில் தீவிர தேடுதல்

விடுதலைப் புலிகள் இயக்கம் காரைநகர்த் தீவினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவ அரசியல் வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. பூரண கட்டுப்பாட்டினுள் எனக் கருதப்படும் பகுதிக்குள் புலிகள் எவ்வாறு ஊடுருவித் தாக்குதலை நடத்தினர் என்பது குறித்து இராணுவ வட்டாரங்களில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 6ஆந் திகதியன்று பண்டத்தரிப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவடைந்த லெப். ஒப்பிரான், லெப். அன்பழகன் ஆகியோரின் வீரச்சாவிற்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிறன்று இரவு 8-45 மணியளவில் காரைநகர் கடற்படைத் தளத்தினுள் உள்ள சின்ன ஆலடி என்னும் இடத்தில் வைத்து 'எல்வ்' வானில் ரோந்து வந்த கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் வான் முற்றாக சேதமடைந்தது. அதேநேரம் உதவிக்கு வந்த கடற்படையினர் மீதும் புலிகளால் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதல்களின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(7ஆம் பக்கம் பார்க்க)



பேராசிரியர் அ துரைராசாவின் பூதவுடல் கொண்ட பேழையை யாழ். பல்கலைக் கழக அறிஞர்கள் சுமந்து வருவதனை படத்தில் காணலாம்.

பேராசிரியர் அ துரைராசாவின் பூதவுடல் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.



# வரி விளம்பரம்

**மகாதேவா ஜோதிடம்**
குறிப்பு கை, வீடு, பார்த்தல், அதிர்ஷ்ட எண்மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம்.
(8543)

**புதிய வகுப்புக்கள்**
YOGI HOME SCIENCE ACADEMY 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant - Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன: 71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர் (8530)

**இரும்புத் தகடு தண்ணீர் தாங்கி**
1). (8×4 சதுர அடி ஒன்றரை நூல் தடிமன் இரும்புத் தகடு. 2) 8×8×4 கனஅடி, 4×4 கனஅடி அளவுள்ள சற்சதுர தாங்கி. 3) 12 அடி நீள உருளை வடிவ தண்ணீர் தாங்கிகள் என்பன விற்பனைக்குள்ளன. தொடர்பு: மில்க்வைற் (சி-9692)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீவகக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று டாஸ் ஹோட்டலில் இயங்கிக் கொண்டிருக்கும் வேலணை ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளது.
இக் கலந்துரையாடலில் அனைவரையும் சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.
(பா) (தி)

## சுகாதார கருத்தரங்குகள்

# IN - MEMORIAM

Our homages to the indelible memories left with us by
**Professor A. Thurairajah**
**Former Councillor**
Engineer par excellence, Administrator with a human heart, Intellect who never lost the common touch, truly a great " son of the soil''.
In grateful memory of what he has done and been to us
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI.
(சி-9682)

விடியல் தந்த வேந்திற்கு!
## எமது இதய அஞ்சலி


உலகிற்கு மண் பொறி காட்டினீர்
மக்களின் கல்விக்கு வழிகாட்டினீர்
எமது வாழ்விற்கு விடிவு காட்டினீர்

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.


**வெளிவாரி மாணவர் ஒன்றியம்**
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
யாழ்ப்பாணம்
(சி-9683)

## இதய அஞ்சலிகள்

இறைவனடி செய்தி விட்ட
முன்னை நாள் துணை வேந்தரும்,
தமிழீழத்தின் தலைசிறந்தகல்விமான்களில்
ஒருவருமாகிய.
பேராசிரியர் அ. துரைராசா அவர்கட்கு
எமது இதய அஞ்சலிகள்



அமரத்துவமடைந்த பேராசிரியர்
அ. துரைராசா அவர்களுக்கு
## இதய அஞ்சலி



எமது நிறுவனத்தின் நிறுவுனர் பேராசான் அ. துரைராசா அவர்களுடைய திடீர் மறைவினால் ஆறாத்துயருறுகிறோம். எமக்கெல்லாம் முன்னோடியாய், முதல்வனாய், வழிகாட்டியாய் அமைந்தவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எமது நாட்டின் பொருண்மிய மேம்பாட்டிற்காக துறைசார் நிபுணர்களை ஒன்றிணைத்து தலைமை தாங்கி வகுத்துத்தந்த பயன்தரு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவோம் என்று உறுதி பூணுவோமாக.

அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்-

**பொருண்மிய மதியுரையகம்.**
The Economic Consultancy House
(TECH)
(8564)

முன்னாள் துணைவேந்தர்
பேராசிரியர் அ. துரைராசா
அவர்கட்கு
எமது கவிதாஞ்சலி

# நினைவு கூருகின்றோம்...
# 15.06-1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 18 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு - நிந்தவூர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லும்போது வீரச்சாவெய்திய,
**கப்டன் பிறின்ஸ்** (ஏகாம்பரம் யோகலிங்கம் - முதலைக்குடா - மட்டு)

1989ஆம் ஆண்டு கிளி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட,
**ஜேக்கப்** (திருநாவுக்கரசு ஜெயக்குமார் - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு திருமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,
**ஜெகன்** (ஆப்தீன் முகமட்யூசுப் - குச்சவெளி - திருமலை)
**டங்கா** (மார்க்கண்டு அருமைநாயகம் - கட்டைபறிச்சான் - திருமலை)

மன்னார் - தலைமன்னாரில் பழையபாலம் சிறிலங்கா இராணுவ முகாம்மீது மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,
**புலோமின்** (அப்பையா தெய்வேந்திரன் - முருங்சன் - மன்னார்)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரின் உலங்குவானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். கணேசமூர்த்தி** (இராமசாமி சிவபெருமான் - சாளம்பைக்குளம் - வவுனியா)

பாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,
**டெனி சித்தப்பா** (சின்னத்தம்பி விஜயன் - வாழைச்சேனை - மட்டு)
**தினேஸ்** (போகநாதன் பிரபாகரன் - உயிலங்குளம் - துணுக்காய்)
**றெஜி** (...வவுனியா)
**அரி** (ஆறுமுகம் மோகனதாஸ் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,
**இராமு** (சந்தனம் சங்கர் - நெளுக்குளம் - வவுனியா)

லகுகலவில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய
**ராவ்** (முகமது ரபீக் - பொத்துவில் - அம்பாறை
**டேவிட்** (க. இராஜேந்திரம் - பொத்துவில் - அம்பாறை)

பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் எமது முகாம் ஒன்றின்மீது மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய;
**குபீர்** (...அக்கரைப்பற்று - அம்பாறை)
**அன்வர்** (......)

வவுனியா காமினி வித்தியாலய முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,
**பர்சான்** (அப்துல்காதர் சம்சுதீன் - காக்கையன்குளம் - வவுனியா)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால்

அனைவரையும் சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(பா) (தி)

## சுகாதார கருத்தரங்குகள்

(தொல்புரம்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் கடைப்பிடிக்கப்படும் சுகாதார வார நிகழ்வையொட்டிய தொடரில் கட்டுடை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் 16 ஆம் திகதி காலை சுகாதார சம்பந்தமான சிறுவர் நிகழ்ச்சியும், கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

17 ஆம் திகதி காலை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் மூளாய் சிறுவர் ஆசிரிய பயிற்சி நிலைய ஆதரவில் சுகாதாரக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் போஷாக்குணவின் அவசியம் பற்றியும், சுகாதார சம்பந்தமான பல்வேறு கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

(41)

## தையல் கண்காட்சி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் உடுவில் பிரதேச நிலையத்தில் மாபெரும் தையல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

மேற்படி கண்காட்சி 16ம் திகதி வியாழக்கிழமை காலை 9. 30 மணியளவில் பிரதேச நிலைய மண்டபத்தில் உடுவில் பிரதேச இணைப்பாளர் எஸ். எஸ். நேசராஜ் தலைமையில் நடைபெறும்.

(41)


**புதினம்**

**15.6.94**

**இதழ்**

**விற்பனையாகிறது**

(8544)




நிறை மனம் கொண்ட வேந்தர்
நிகரில்லா திறம் படைத்தோர், வாழ்வில்
நறை சொரி மலராய் கல்வி நறுமணம் ஊட்டும்-
பேராசான்
இறைபதம் சேர்ந்தார் என்று இதயத்தால்
துயரம் கொண்டு
கூட்டுறவாளர் நாங்கள் கூடியே அஞ்சலிக்கின்றோம்.

**தலைவர்- பணிப்பாளர்கள் -பணியாளர்கள்**
**வேலணை பல. நோ. கூ. சங்கம்**

(சி 9690)

## பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு

உள்ளம் உருகி அஞ்சலிக்கின்றோம்



அறிவுப் பெருங்கடலாய் அன்பு சொரி நிழல் மரமாய்
அனைவரும் அறிவுக்கண் கொண்டவர்களாய்
தமிழீழ மண்ணில் வாழ வேண்டும் என்ற வேட்கை
யுடையவராய்
வாழ்ந்தாய் வாழ வழி காட்டினாய்
உன் சேவை பெரிதும் தேவை என நின்றோம்
தேவர் உலகு அழைத்ததோ
மண்ணையும் மனிதனையும் நேசித்தாய்
நின்னை மறவோம்
ஐய நின்பொற்பாதம் போற்ற நிற்கின்றோம்

**வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள்**
**யாழ்/ பல்கலைக்கழகம்**

யாழ்ப்பாணம்
1994-6-14

(8558)

## பேராசிரியர் அ. துரைராசா

அவர்கட்கு

## எமது கவிதாஞ்சலி



இதயம் ஒருகணம்
விறைத்து நின்றது
உங்களை இழந்த
சேதியைச் சுமந்த
காற்றும் ஒருகணம்
வீசமறந்தது
ஓ... !
மரணம் ஒன்று
மரணித்து விட்டதாம்
தமிழின் புதல்வனை - நாம்
இழந்து விட்டோமாம்.
ஏற்க மறுக்கிறது இதயம்
பிரியாவிடைக்காய்
கைகளைக் குலுக்கியது
நேற்றுத்தான்.
இன்றோ
மரணம் உங்களுடன்
கைகுலுக்கி விட்டது-
இதயம் நெருடும்
சோகச் சுமையால் - எம்
கண்கள் உதிர்க்கும்
கண்ணீர்ப்பூக்கள்.

**யாழ். பல்கலைக்கழக**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

(8565)

குபா (...அக்கரைப்பற்று - அம்பாறை)

**அன்வர்** (......)

வவுனியா காமினி வித்தியாலய முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**பர்சான்** (அப்துல்காதர் சம்சுதீன் - காக்கையன் குளம்- வவுனியா)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொத்துவில் குஞ்சனோடைப் பாலத்தடியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர்போட்டு எரித்துக்கொல்லப்பட்ட பொத்துவில் - அறுகம்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்,

திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்

1991-ம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். தவக்குமார்** (கிருஷ்ணபிள்ளை சிவபாலசுந்தரம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்,

1992-ம் ஆண்டு யாழ் - ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். அறிவழகு** (யோசப் வின்சன் - இலந்தைமோட்டை - மன்னார்)

**2-ம் லெப். செம்பியன் / சுபாஸ்** (பிரான்சிஸ் றொபின்சன் - 10-ம் வட்டாரம் - புங்குடுதீவு)

திருமலை - இலங்கைத்துறை முகத்துவாரம் நோக்கிச் சென்ற பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட 01 தமிழிளைஞன்

1993-ம் ஆண்டு பூநகரி - கறுக்காய் தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். பத்மசீலன் | மனோ** (அழகையா காந்தரட்ணம் - ஏறாவூர் - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-9688)


**கொழும்பு ஸ்ருடியோ**

தொழில்நுட்பத்தில் 35வருட அனுபவம்வாய்ந்தவர்கள்
தரமான

- ★ Line, Half tone and Colour Blocks
- ★ றபர் சீல் Rubber Stamps
- ★ சில்க் ஸ்கிறின் Silk Screen
- ★ Re-copy பழைய படங்களில் இருந்து புகைப் படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
தரமாகப் பெற்றுக் கொள்க.

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9617)

உலகம் போற்றும் உத்தம கல்வியாளர்

## அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களுக்கு

# இதய அஞ்சலிகள்

(முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர், தற்போதைய திறந்த பல்கலைக்கழக பேராசிரியர், யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவர்)

அன்பும் பண்பும் நிறைந்த பேராசான்
ஆற்றல் மிகுந்த வழிகாட்டி
பழைய மாணவர் சங்கத் தலைவன்
பார் முழுதும் வியக்க உழைத்தீரே
கலை ஊர்வம், தொழில் நுட்பம் உடுநகரில் வளரவென
தொழில் நுட்ப நிறுவகம் நிறுவ உழைத்தீர்.

பழைய மாணவர் சங்கம்
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
(தாய்ச்சங்கம்)



ஆசிரியர் வாண்மைக்கு உழைத்தவர்
அன்புடன் எம்மை வழி நடத்தியவர்
இன் முகத்தால் எம்மையாட் கொண்டவர்
கல்வியில் உயர்ந்தோர்க்கெம் இதய அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

தமிழ் மாணவர் உயர் கல்வி செழுமையுற உழைத்தோன்
சொல்லும் செயலும் ஒன்றாயினன்
இன விடுதலைக்காய்க் குரல் கொடுத்தவா
பேராசான், பண்பாளர், கல்விக்கடல், ஒருங்கேயமைந்த
இனிய முகத்தை என்று நாம் காண்போம்.

எதிரிக்கும் தீங்கு நினையாதோன்
தான் கற்ற கல்லூரியை நேசித்து வழி நடத்தியோன்
உன்னத நிலைக்கு உயர உழைத்தோன்
அவர் நாமம் என்றும் வாழும்.

பாடசாலை அபிவிருத்திச்சபை
யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

தமிழ் மாணவர் உயர் கல்வி செழுமையுற உழைத்தோன்
சொல்லும் செயலும் ஒன்றாயினன்
இன விடுதலைக்காய்க் குரல் கொடுத்தவா
பேராசான், பண்பாளர், கல்விக்கடல், ஒருங்கேயமைந்த
இனிய முகத்தை என்று நாம் காண்போம்.

பழைய மாணவர் சங்கம்
கனடா கிளை
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி



தான் கற்ற கல்லூரியை நேசித்து வழி நடத்தியோன்
உன்னத நிலைக்கு உயர உழைத்தோன்
அவர் நாமம் என்றும் வாழும்.

பாடசாலை அபிவிருத்திச்சபை
யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

★

★

உனக்கென ஒரு தத்துவத்தை வடித்தெடுத்தாய்
உலகின் பல்கலைக்கழகங்கள் போற்றிட உயர்ந்தாய்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பெற்றநற்பேறே
எம் தலை மகனே உன் காலடிக்கு எம் இதய அஞ்சலி

பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

அமெரிக்கன் மிஷன் தந்த அறிஞர்க்கறிஞனே
வள்ளுவன் வாக்கிற்கோர் வழிகாட்டியாய் வந்தவனே
காட்சிக்கெளியவனே காண்பவர்க்கு இனியவனே
மாற்றானும் போற்றும் மாண்புமிகு குணத்தோனே.

கண்மூடி இன்று கடுந்துயில் கொள்வதெல்லாம்
மீண்டும் எமக்காக மிகு சேவை செய்திடவோ
சந்தன மரமே இன்று உன்பிரிவால் - நாம்
வெந்து வேகின்றோம் வேதனையால்.

- கல்லூரிச் சமூகம் -

யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பதினொரு வருடங்கள் கல்வி பயின்று, உயர்ந்த பேராசான் அழகையா துரைராசா அவர்கள் அமரத்துவம் அடைந்தமை ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். இனப் பற்றும், சுதந்திர உணர்வும், தன்னலமற்ற குணமும், தெய்வ வடிவும் சொல்லும், செயலும் ஒன்றாய்க் கொண்ட ஒரு உன்னத கல்வியியலாளனின் இழப்பு ஈடிணையற்றது. இராணுவ நடவடிக்கையினால் உருக்குலைந்த இக் கல்லூரியைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அன்னார் எடுத்த முயற்சிகள் அளப்பரியது. இக் கல்லூரியின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர், தன் புன் சிரிப்பினாலும், கள்ளங் கபடமற்ற நன் மனத்தாலும் தன்னிகரில்லாத் தலைவனாக உயர்ந்தவர். அவர் புகழ் என்றும் வாழும் !

ந. அனந்தராஜ்
அதிபர்
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

அன்புடையான் என்பும் உரியான்
இன்புடையான் எங்கள் பேராசான்
கல்வியின் விளக்காய் ஒளிர்ந்தவர்
எங்கள் அண்ணல் துரைராசா.

மாணவர்கள்
யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

- ★ எளிமையானவர்
- ★ இனிமையானவர்
- ★ எளிமையும் இனிமையும் கலந்த பண்பாளர்
- ★ ஆற்றல் மிக்கதோர் விஞ்ஞானி

- ★ இனப்பற்றாளர்
- ★ தீர்க்கதரிசனமுடிவெடுப்பாளன்
- ★ நன்றிமறவா நற்குணமுடையோன்
- ★ பொருண்மிய அறிஞர்

★ ஒளி இருளை அகற்றும் ★

# யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

வல்வெட்டித்துறை

(8552)

பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

அன்னாரின் பிரிவாற்றாது துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
யாழ்/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கரவெட்டி

★ முக்கிய குறிப்பு:-

15-06-94 புதன்கிழமை நடைபெறவிருந்த எமது கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி 21 - 6 - 94 செவ்வாய்க்கிழமை குறித்த நேரத்துக்குப் பின்போடப்பட்டுள்ளது. (5888)

## இதய அஞ்சலி

பொறியியல் துறையில் சாதனை பல புரிந்த
பேராசிரியர் அ. துரைராசா
அவர்கட்கு
இதய அஞ்சலி



அமரர்
பேராசிரியர்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், விஞ்ஞான மேதையுமான, மறைந்த மாமனிதர்

பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு, எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றோம்.

செயலாளரும், ஊழியர்களும்.
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.
(சி-9679)

விஞ்ஞான மேதையும், பேராசிரியரும்,
முன்னாள் துணைவேந்தருமான
அழகையா துரைராசா
அவர்களுக்கு

## துயர் தோய்ந்த அஞ்சலி



உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியினன்
எள்ளுந் திறமேது மற்ற ஏந்தல் துரைராசா

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை

எமது ஆயுட் கால உறுப்பினராகவும்,
கரவெட்டிப் பிரிவு போஷகராகவும்,
யாழ். கிளையில் ஆளுநர் சபையினை
பிரதிநிதிப் படுத்தும் உறுப்பினர்களில்
ஒருவராகவும்,
யாழ். கிளையில் தேசிய பயிலுநர் சபையின்
பயிற்சி ஸ்தாபகராகவும் சேவையாற்றிய

பேராசிரியர் அ. துரைராசா அவர்களது

மறைவுக்காக எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

உறுப்பினர், ஊழியர்,
தொண்டர்கள்
இ. செ. ச. யாழ். கிளை

(சி. 9681)

## நெஞ்சம் நெகிழும் கண்ணீர் அஞ்சலி

அமரர் அழகையா துரைராசா
அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்)

பேராசிரியராக, பீடாதிபதியாக, துணைவேந்தராக இருந்து கொண்டே சிறந்த நாட்டுப் பற்றாளனாக, இனப்பற்றாளனாக விளங்கி எமது மண்ணுக்கு பெருமை சேர்த்ததை என்றும் மறக்க முடியாதே.

இன்னொருவரினால் இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தி சென்றவருக்கு எமது நெஞ்சம் நெகிழும் கண்ணீர் அஞ்சலிகளை தந்து பணிகின்றோம்.

கரவெட்டி. நெல்லியடி வாணிபர் கழகம்.
(5889)

அமரராகிவிட்ட யாழ் பல்கலைக்கழக முன்னாள்
துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு

## கண்ணீர் அஞ்சலிகள்

தம்புகழ் நிறுவி
எம் மக்கள் புகழிற்கு அரண்தந்து
அமரத்துவமாகிவிட்ட துணைவேந்தர் - பேராசிரியர்

அ. துரைராசா அவர்கட்கு

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானகணித பயிலுனர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்காக தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க. பொ. த உயர்தரப்பரீட்சையில் தூயகணிதம், பிரயோககணிதம் விவசாய விஞ்ஞானம், பௌதிகவியல், இரசாயன வியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் எவையேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை ஜூலை 21 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். இதுதொடர்பான அரசவர்த்தமானி அறிவித்தலை ஈழநாதம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

★ ★

இலங்கை தொழில் நுட்ப கல்விச்சேவைபொது ஊழியர் கோப்பின் II ஆம் வகுப்பு பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கும், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கும், இலங்கை அதிபர்கள் சேவையின் I. II. III. ஆம் தரங்களுக்கான ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அரசவர்த்தமானி அறிவித்தலை ஈழநாதம் அலுவலகத்தில் அலுவலக வேளையில் பார்வையிடலாம்.

## கண்டெடுப்பு

ஆரியகுளம் சந்திப்பகுதியில் நான்கு பட்டுச்சேலைகள் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கோப்பாயில் வீதியில் கண்டெடுக்கப்பட்ட நகை ஒன்றும் பெருமாள்கோவிலுக்குஅருகாமையில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்றும் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.



அமரர்

பேராசிரியர்

## அழகையா துரைராசா

B. Sc. (Eng) Ph. D. (Cantab)

பொறியியல் துறையில் பல ஆய்வுகளை நடாத்தி அளப்பரிய சேவை புரிந்து ஆற்றல் மிகு பொறியியலாளர்களை உருவாக்கிய ஆசானுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்மாணத் திணைக்கள அலுவலர்கள்,
கட்டிடத் திணைக்கள அலுவலர்கள்,
பாடசாலை வேலைப்பகுதி அலுவலர்கள்.

(8557)



உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியினன்
எள்ளுந் திறமேது மற்ற ஏந்தல் துரைராசா
பெருநிதியே கலையுருவே பேரருளே பேசரிய
திருமகனே தமிழீழந் தவிக்க விட்டாய் தாங்காது
எம்முயிரே

அன்னாரின் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா / விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி.

15-06-1994.

(8562)

தம்புகழ் நிறுவி
எம் மக்கள் புகழிற்கு அரண்தந்து
அமரத்துவமாகிவிட்ட துணைவேந்தர் - பேராசிரியர்

### அ. துரைராசா அவர்கட்கு
### எமது மனம் அழும்

## கண்ணீர்த்துளிகள்!

யா- மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், ஊழியர்கள்
பருத்தித்துறை

(8560)

பெருமாள்கோவிலுக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்றும் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## மீன் சந்தை இடமாற்றம்

(குருநகர்)

கடந்த ஞாயிறு எறிகணைத் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் இருந்த மீன் சந்தை தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ளது.

## இரண்டாம் ஆண்டு நினைவு அலைகள்



தோற்றம்
1950-07-06

மறைவு
1992-05-15

### அமரர் மாதன் வேலுப்பிள்ளை

(தலைவர் ப. தெ. வள அ. வி. கூ. சங்கம் கொடிகாமம், தென்மராட்சி ப. தெ. வள அ. வி. கூ. சங்கங்களின் கொத்தணி, வரணி.
செயலாளர்: வடமாகாண ப. தெ. வ. அ. வி. கூ. ச. சமாசம் யாழ்ப்பாணம்.)

அன்பின் தெய்வமே...
அணுவளவும் உங்கள் நினைவு
அகலவில்லை எம்மைவிட்டு.

உமது பிரிவில் வாழும்
**மனைவி, பிள்ளைகள்.**
அசோக், ஆனந்தி,
இளங்கோ, ஈஸ்மதி,
உஷா, ஊர்மிளா, எடிசன்.

நாவற்காடு,
வரணி.
15-06-1994

(8525)

## கண்ணீர் அஞ்சலி



தலைசிறந்த சமூக நற்பணியாளனும்
எமது நிறுவன உருவாக்க உறுப்பினரும் ஆலோசகருமான
அமரர் பேராசிரியர்

### அழகையா துரைராசா

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"முற்படு நலம்பல நல்கிட முயல்வேனில்
நற்பணி பற்பல நாடெழப் புரிவோம்".

"நவஉதயம்",
203. கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(8559)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

### பேராசான் அ. துரைராசா அவர்கட்கு

## எமது இதயம்நெகிழ்ந்த அஞ்சலிகள்



உலகம் புகழும் கல்விமான் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் நேர்மையும், திறமையும் துணிச்சலும் கொண்டு நெருக்கடியான காலத்திலும் தமிழீழத்தின் கல்வி வளர்ச்சிக்காக தீர்க்கதரிசன சிந்தனையுடன் வழிகாட்டியவர். அன்னாரின் வழிகாட்டல்கள் தமிழீழ மக்களுக்கும், உலகுக்கும் என்றும் ஒளியாக அமையும்.

நீங்காத நினைவுகளுடன்,

வடமராட்சி கிழக்கு மக்கள் சார்பில்
வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம்
மருதங்கேணி

(8563)

# யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
# அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா
# அஞ்சலி மலர்

## அரும்பணி புரிந்த அறிஞர்

நமது பல்கலைக்கழகத்திலே சென்ற ஐந்தாண்டுகளுக்குமேலாக அரிபபணி புரிந்தவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள். சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சென்ற சனிக்கிழமை இயற்கை எய்தியதையிட்டுப் பெருந் துன்பமும் அதிர்ச்சியும் அடைகிறோம். அவர் மறைவு நமது பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் கல்வியுலகுக்கும் பொது மக்களுக்கும்நேர்ந்துள்ள பேரிழப்பாகும்.

நெருக்கடிகளும் வசதிக் குறைவுகளும் நிரம்பிய தொரு காலகட்டத்திலே பல்கலைக்கழகம் தொடர்ந்தும் நடைபெறும் வண்ணம் வழிநடத்திய அவரது திறமையும் சாதுரியமும்போற்றத்தக்கவை. இங்கு நிலவிய தடைகளையும் இடையூறுகளையும் சமாளித்து உயர் கல்விச் செயற்பாடுகளிலே தளர்ச்சி ஏற்படக்கூடாதென்ற எண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார். இதன் பொருட்டுச் சகலதரப்பினரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் ஆளுமை அவருக்கு அமைந்திருந்தது. பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் உட்பட அனைவரின் அன்புக்கும் உரியவராக அவர் விளங்கினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்ந்து சிறக்க வேண்டும் என்ற உன்னத நோக்குடன் அயராது உழைத்தவர் பேராசிரியர் துரைராசா. அவர் இங்கு புதிய பீடங்களும் புதிய கற்கை நெறிகளும் புதிய துறைகளும் தோன்ற வேண்டும் என்று திட்டம் வகுத்து அதன் பொருட்டுப் பாடுபட்டார். விளையாட்டுத்துறையும், கலைநிகழ்ச்சிகளும் இங்கு பல்கிப் பெருகுவதற்கு ஊக்கம் தந்தார். நாட்டு மக்கள் நலமுற்று வாழ்வதற்கு உகப்பான சூழ்நிலை தோன்றுவதற்கான பணிகளை மேற்கொண்டார். கவின் கலைகளே நின்றுவிடாமல் விஞ்ஞானமயமான சிந்தனைகளும் தொழில்நுட்பத் திறன்களும் நம்மவர் மத்தியிலே பிரபலமாக வேண்டுமென்றும் விரும்பிமுயன்றார்.

மிக அண்மையிலேதான் அவருக்கு நாமெல்லாரும் விரிந்த அளவிலே பாராட்டு விழாக்களையும் பிரியாவிடைகளையும் நடத்திப் போற்றினோம். அவர் மீது நாம் கொண்டிருந்த பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்தினோம் அவர் நம்மை விட்டுப் பிரிகிறாரே என்ற உணர்ச்சி நம்மை வாட்டியது. அந்தப் பிரிவுத் துயரம் சற்றே



## வாழ்ந்து காட்டியவர்

ஒரு துணைவேந்தர் எப்படி இருக்க வேண்டும் பொறுப்பாள்கையுடைய ஒருவர் எப்படி இருக்க வேண்டும், ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் எப்படி இருக்க வேண்டும், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பேரறிஞருக்கும் சமூகத்துக்குமிடையேயுள்ள உறவு எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய அமரர் பேராசிரியர் துரைராசா அவர்கள். பல்கலைக் கழகச் சமூகத்துக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் எடுத்துக் காட்டாகவும் அவர் விளங்கியவர்.

பல்கலைக் கழக ஆசிரியர்களாகிய நாம் மிகுந்த துயரச் சுமையுடனே அவருடைய பிரிவை எண்ணிக் கலங்குகின்றோம். பல்கலைக் கழக ஆசிரியர்களாகிய நாம் அப்பெருமகனுடைய குடும்பத்தினருடைய பெருந் துன்பத்திலே பங்கு கொள்கிறோம். அமரர் பேராசிரியர் துரைராசாவினுடைய ஆன்மா அமைதியடைய இறையருளை வேண்டுகிறோம்.

தலைவர்,
பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம்.

## காணிக்கை

நாம் எல்லாம் அல்லல்பட்டு, அலைந்த நேரத்தில், எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக, பேராசானாக, திகழ்ந்த எமது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் திடீர் மறைவால் நாம் பெரிதும் அதிர்ச்சி அடைகின்றோம்.

தனைகளும் தொழிலநுட்பத் திறன்களும் நம்மவர் மத்தியிலே பிரபலமாக வேண்டுமென்றும் விரும்பிமுயன்றார்.

மிக அண்மையிலேதான் அவருக்கு நாமெல்லாரும் விரிந்த அளவிலே பாராட்டு விழாக்களையும் பிரியாவிடைகளையும் நடத்திப் போற்றினோம். அவர் மீது நாம் கொண்டிருந்த பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்தினோம் அவர் நம்மை விட்டுப் பிரிகிறாரே என்ற உணர்ச்சி நம்மை வாட்டியது. அந்தப் பிரிவுத் துயரம் சற்றே ஆறுவதற்கு முன்பாகவே அவர் இவ்வுலக வாழ்வை நீத்து மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டமை மிகுந்த வேதனையைத் தருவதாகும்.

இத்துன்ப வேளையில் அவரது மறைவினால் வருந்தும் அவர் தம் துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். அவர்களோடு இணைந்து அவர்களின் துன்பத்தினைப் பகிர்ந்து கொள்ளுகிறோம்.

தலைசிறந்த கல்விமானும், உயரிய பண்புகள் வாரிக்கப்பெற்ற பொதுநலப் பணியாளரும் ஆகிய பேராசிரியர் துரைராசாவின் குறிக்கோள்களையும் நன்னோக்கங்களையும் பேணிப் போற்றுவதும் கடைப்பிடிப்பதுமே நாம் அவருக்குச் செய்யத்தக்க கைமாறாகும்.

பேராசிரியர் க. குணரத்தினம்
துணைவேந்தர்.



## காணிக்கை

நாம் எல்லாம் அல்லல்பட்டு, அலைந்த நேரத்தில், எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக, பேராசானாக, திகழ்ந்த எமது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் திடீர் மறைவால் நாம் பெரிதும் அதிர்ச்சி அடைகின்றோம்.

தங்கள் நிமிர்ந்த நடை, யாரையும் வசீகரிக்கும் அழகு வதனம். தங்கள் எளிமையான சுபாவம், யாருடனும் எளிதில் பழகும் பாங்கு இவை எல்லாம் நாம் உங்களிடம் கண்டுணர்ந்த பாடங்கள் ஐயா

தங்களுடன் நாம் கழித்த நாட்கள் ஒரு மனித நேயமிக்க, உலகப் புகழ்பெற்ற பேராசிரியருடன் பழகிய உன்னத நேரமாகக் கருதுகின்றோம். ஐயா, தங்கள் மறைவு கண்டு இன்று உலகமே அழுகின்றது ஐயா. யாழ் பல்கலைக் கழக ஊழியர்களாகிய யாமும் எமது கண்ணீரைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

தலைவர்
பல்கலைக் கழக ஊழியர் சங்கம்

## எம் மக்களின் நலனில் அக்கறை காட்டிய பெருந்தகை

பேராசிரியர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் மாத்திரமல்லாது எமது பிரதேசத்தினதும், இனத்தினதும் முன்னேற்றத்திற்குரிய பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். எமது இனத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதி முக்கியமான விடயம் சுயசார்புப் பொருளாதார வளர்ச்சியே என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அவர் அதற்கான பல திட்டங்களைத் தயாரிப்பதிலும் அவற்றைச் செயல்முறைப்படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டார். மேலும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்கள் பொதுமக்களை எட்ட வேண்டும் என்ற சிந்தனையில் அவர் பல முயற்சிகளை எடுத்துள்ளார். அவற்றில் ஒன்று யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை உருவாக்கியதும் அதன் ஆரம்பத் தலைவராக இருந்து அச்சங்கத்தின் செயற்பாடுகளை நல்ல வழியில் நெறிப்படுத்தியதும் ஆகும்.

பேராசிரியர் துரைராசாவின் மறைவு அவரது குடும்பத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அவரது மறைவினால் மிகுந்த கவலைக்கும் துயரத்திற்கும் உட்படுத்தப்பட்டுள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவ்விழப்பைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியை ஆண்டவன் அவர்களுக்குக் கொடுப்பாராக என்று பிரார்த்திக்கின்றேன். பேராசிரியர் துரைராசாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

பேராசிரியர் சி. மகேஸ்வரன்
பீடாதிபதி - விஞ்ஞானபீடம்.

## மண்ணை நேசித்த மாமனிதர்

பேராசிரியர் அவர்கள் இம் மண்ணின் கல்விவளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியன. தமக்கேற்பட்ட கொடிய நோயையும்பொருட்படுத்தாமல், அவர் எமதுமண்ணின் கல்வித்தரம் அண்மைக் காலங்களில் தாழ்ந்துவருவதை உணர்ந்து, அதனை உயர்த்துவதற்குப் பாடுபட்டார்.

தன்னலங் கருதாது எமது மண்ணை நேசித்த அந்த மாமனிதருக்கு எம்தேசமே பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

தலைவர்
விஞ்ஞானபீட மாணவர்
ஒன்றியம்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## எப்படி முடிந்தது

ஏடெடுத்துப் படித்தவர்கள்
இத்தேசத்தை மறந்துவிட
உன்மூச்சே தேசம் தான்,
என்றிருந்த உத்தமனே
சுதந்திர நாடு பற்றிக்
கற்பனைகள்வளர்த்தவனே
எப்படி உன்னால்,
மரணிக்க முடிந்தது?
உனது கனவுகள்,
எப்படி நின்றன?
உனது மலர் முகம்
எப்படி மறைந்தது?

தலைவர்
பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம்

## வழிகாட்டி

மாமலை சரிந்ததோ!
மனிதமே வியந்ததோ!
தேசமே சோகத்தில்
அமிழ்ந்ததோ!
எம் தந்தையே உம் உயிர்
எமை விட்டுப் பறந்ததோ!
தேசத்து வழிகாட்டியே,
பாசத்து நாயகனே,
பரிதவித்து நின் ஆத்ம
சாந்திக்கு,
அஞ்சலிக்கிறோம்.

தலைவர்,
கலைப்பீட மாணவர்
ஒன்றியம்

## சொந்தமென்று யாருண்டு சொல்லு துணைவேந்தே!

மரணம் என்ற சொல்லு வந்து
பனைத் தூக்கிச் சென்றது
வரும் வழிகள் அத்தனையும்
கண்ணீரைத் தந்தது-
மனிதனா மறைந்தது? மானுடமே மறைந்தது
நிமிர்ந்த நடையெங்கே?
நேர் கொண்ட பார்வையெங்கே
துணிந்த செயல் எங்கே?
துணைவேந்தர் துரைராசா எங்கே?
சடைத்த வேம்புகள் சாய்ந்து அழுகின்றன
கழகக் கட்டடங்கள் கண்ணீரைச் சொரிகின்றன.
எங்கள் முன் நீ இருந்து
இனித்த நாட்கள்
இழைபோல் ஓடுதையோ.
தங்கும் அறைக்குள் நீ
தரிக்கும் நாற்காலி
பொங்கி அழும் குரல்
பொழுதெல்லாம் கேட்குதையோ-
இருகரமும் இறுக்கி நீ
எம்மை அணைத்தாய்
இன்னலுற்ற எமைக்காத்து
இமயம் போல் வளர்ந்து நின்றாய்
வந்ததொரு மாயமதால் - உன்
வாய்ப்பேச்சுக் கேட்போமா - எங்கள்
சொந்தமென்று யாருண்டு
சொல்லு துணைவேந்தே!

-தமிழ்மன்றம்

(சி|9686)

★ மாமேதை, மக்கள் பண்பாளர், மண்ணின் மைந்தர் ஆகிய எமது பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும்,

★ பேராதனைப் பல்கலைக்கழக, பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், பொறியியல் பேராசிரியரும்

★ திறந்த பல்கலைக்கழக, பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் பொறியியல் பேராசிரியரும்,

★ திறந்த பல்கலைக்கழக, இந்நாள் பொறியியல் பேராசிரியரும்

ஆகிய

# பேராசிரியர் அழகையா துரைராசா

அவர்களுக்கு

# எமது இதயபூர்வமான அஞ்சலிகள்

## கண்ணீரில் இருந்து சில துளிகள்.....

துணைவேந்தர் பதவிக்கே இலக்கணம் வகுத்த பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் திடீர் மறைவு மாணவர் உலகையே துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆசானாய் நண்பனாய்' பண்பாளனாய், நிர்வாகியாய் இருந்து அவற்றிற்கே பெருமைகள் சேர்த்து ஒளி விளக்காய் ஆனவர். மாணவர்களுடன் பழகும் முறையில் அவர் கையாண்ட புதுமைகள் அவருக்கென நீங்கா இடத்தை எம் மனங்களில் ஈட்டிக்கொடுத்தன. இவர் பல்லினம் போற்றும் பேராசான். மனித நேயத்தின் உதாரண புருஷன், ஓர் கல்விமான் சமூக பார்வையாளன் ஓர் யதார்த்தவாதி, எளிமைக்கு புகழைச் சேர்த்தவர் இழப்புக்களும் இறப்புகளும் மலிந்துவிட்ட இவ்வேளையிலும் அவர் எம்மைவிட்டு நீங்கியமை ஜீரணிக்க முடியாததே.

''கல்வி கற்பதில் மட்டும் மாணவர்கள் ஆர்வமாய் இருந்து விடுவதால் கல்வியினை பூரணமாகப் பெற்றுவிட முடியாது. கல்விக்கு அப்பால் சென்று சமூக நோக்கும், தெளிந்த சிந்தனையும் கொண்டு மக்களின் நலன்களில் அக்கறையுடன் சமூக சேவைகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும்'' என்பது பேராசிரியரின் மாணவர் தொடர்பான கருத்துக்களில் முதன்மையானது. இதற்கிணங்கவே எமது கழகம் தொடர்பான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடும் போதும், உதவிகள் கோரும் போதும் எதுவித மறுப்பும் இன்றி விரைந்து செயல்படுவது எம்மை வியப்பில் ஆழ்த்திய விடயங்கள் அவரின் இழப்பால் துயருறும் மாணவ சமுதாயத்திற்கும் அவரது குடும்பத்தினருக்கும், பல்கலைக்கழகக் குடும்பத்தினருக்கும் எமது கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வன் செ. ஸ்ரீநிவாசன்
தலைவர் புவியியற் கழகம்
(யாழ். பல்கலைக்கழகம்)



## ஆண்டவனை வேண்டுகிறோம்

நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை இறைவன் ஏற்படுத்திவிட்டார். ஆம், ஒரு மாமேதையை மறைத்து விட்டார். எமது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் ஒரு மாமேதை. அதில் எந்த வகையிலும் யாரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை அறிவு, ஆற்றல், அனுபவம் பண்பு பழகும் தோரணை, விடா முயற்சி, ஊக்கம், வாய்மை பேசுதல் என்பவற்றுக்கு நிகர் அவரே. இந்த அன்பு உள்ளத்திடம் பழகுபவர்கள் யாரும் அவருடன் ஒன்றியே போவார்கள். தனக்கு ''மரணச்சனி'' வந்துவிட்டது என 1993 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து அடிக்கடி அவர் கூறுவார். அண்மையில் அவரது பிரியாவிடை விழாக்களின்போது 1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு போகும்படி இறைவன் பணித்தார். இன்று பல்கலைக் கழகத்தைவிட்டுப் போகும்படி அவரே கூறுகிறார். ஆகவே 'போகிறேன்' என்று சொன்னார். ஆயினும் பல்கலைக் கழகத்தை விட்டுப் போனாலும் அதன் அபிவிருத்தியையும் நமது பண்பையும், மக்களையும் மறக்க மாட்டேன். வதிரியும், யாழ்ப்பாணமும் தான் எனது இருப்பிடம் போய்விட்டு வருவேன்'' என்று கூறினார். ஆனால் இன்றோ நிரந்தரமாக போயேவிட்டார். எனது குடும்பத்துக்காகவும் பிள்ளைகளுக்காகவும் இனித்தான் வாழவேண்டும் என்று கூறி பல திட்டங்களை வகுத்தார். ஆனால் அத்தனையையும் தடுத்து அவரை ஆண்டவன் அழைத்துக் கொண்டார். இந் நிலையில் அவரது குடும்பத்தையும் அன்புச் செல்வங்களையும் அவரைப்போல ஆண்டவன்தான் பார்ப்பார். பார்க்க வேண்டும். அதற்காக, அவர்களுக்கு நல்வாழ்வும் திடசித்தத்தையும் கொடுக்கும்படி நாம் ஆண்டவனை வேண்டுகிறோம்.

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்,
தலைவர், புவியியற்றுறை,
புவியியற்றுறை ஆசிரியர்கள், ஊழியர்கள்
மாணவர்கள்.

## கலைப்பீடாதிபதியின் இதயத்திலிருந்து . . .

பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த துயரமடைகின்றேன். கடந்த சில நாட்களாக அவர் கொழும்பு 'நவலோக' ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் போது அவரைப்பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது அவர் இவ்வளவு விரைவில் மரணமாவார் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை

அவர் துணைவேந்தராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த சமயம் புவியியற்றுறையினராகிய நாமும் அவரும் இறுக்கமாகச் செயற்பட்டோம். எமது துறையின் வளர்ச்சிக்கு அவர் பெரும் ஒத்துழைப்பாளராக இருந்தார். அதேபோல அவருற்ற நற்கருமங்களுக்கு நாமும் மிகுந்த பங்களிப்பாளராக இருந்தோம்.

இதனால் பல முயற்சிகளை வென்றெடுக்கக் கூடியதாக இருந்தது. அவரது ஆழ்ந்த அறிவும் பல நற்பண்புகளும் அவர் மறைந்தவிடத்தும் வழிகாட்டியாக இருக்கும். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் உற்றாருக்கும், மக்களுக்கும், எங்களுக்கும் இறைவன் மன அமைதியைக் கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
புவியியற்துறை
கலைப்பீடாதிபதி,
கலைப்பீடம்.

(சி-9687)

'நவலோக' ஆஸ்பத்திரியில் சிகிச்சை ெ ற்று வரும் போது அவரைப்பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது அவர் இவ்வளவு விரைவில் மரணமாவ ர் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை

அவர் துணைவேந்தராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த சமயம் புவியியற்றுறையினராகிய நாமும் அவரும் இறுக்கமாகச் செயற்பட்டோம். எமது துறையின் வளர்ச்சிக்கு அவர் பெரும் ஒத்துழைப்பாளராக இருந்தார். அதேபோல அவருற்ற நற்கருமங்களுக்கு நாமும் மிகுந்த பங்களிப்பாளராக இருந்தோம்.

உற்றாருக்கும், மக்களுக்கும், எங்களுக்கும் இறைவன் மன அமைதியைக் கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
புவியியற்துறை
கலைப்பீடாதிபதி,
கலைப்பீடம்.

(சி-9687)

---

இம்மண்ணிற்குப் பெருமை சேர்த்த
பெருந்தகையோன்

அமரர்
பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு

எமது
**உளமார்ந்த அஞ்சலிகள்**

பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்.

(சி-9689)

---

## கண்ணீர் அஞ்சலி

அமரத்துவம் அடைந்துவிட்ட
**பேராசிரியர் அ. துரைராசா**
அவர்களுக்கு

எமது
கண்ணீர் அஞ்சலி

இவரின்பிரிவால் துயரடைந்துள்ள, குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-அங்கத்தவர், பணிப்பாளர்,
பணியாளர்-
வடமராட்சி கொத்தணி
பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.
சங்கம்
கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்
அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

(5891)

---

அமரத்துவம் அடைந்த
**பேராசிரியர் அ. துரைராசா**
அவர்களுக்கு

## இதயஅஞ்சலி



குருதி பாய்ந்து குலைந்திடும் நாட்டில்
இறுதி நேரும் எனப்பலர் ஓடவும்
அஞ்சி நடுங்கி அந்நிய நாட்டில்
கெஞ்சி வாழும் கொள்கையர் போகவும்
விஞ்சும் தமிழ்ப் பேணுணர்வுடன் நின்று
அஞ்சல் ஒழிந்த அரும்பணி செய்தாய்

எந்நாடு, என்மக்கள் என்னும் உணர்வோடு
தன்னின மக்களின் கல்விக்காய் தினமுழைத்தாய்
அயராது பாடுபட்டு அரும்பணிகள் ஆற்றி நின்றாய்
துயர்தாளா மனத்தோடு துடிக்கின்றோம் நும்பிரிவால்

வங்கியொன்று வளாகத்துள் தேவையெனும் வளமான சிந்தனையால்
ஏங்கிய காலத்தில் எமை அழைத்து ஊக்கம் தந்தாய்
ஆவனயாவும் செய்து அதனை நீயே திறந்தும் வைத்தாய்
காவலன் நீயே என்றிருந்தோம் காலன் கைப்பட்டதேனோ ஐயா.

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான

**கண்ணீர் அஞ்சலிகள்**

**மக்கள் வங்கி**
யாழ், பல்கலைக்கழக வளாகக் கிளை
முகாமையாளரும், ஊழியர்களும்.

(சி-9685)

---


## மூன்றாண்டு நிறைவு

தமிழீழ மக்களிற்கு
மூன்றாண்டு நற்சேவை நல்கி
நான்காம் வருட சேவையில்
முன்னேறும் இந்நாளில்
எமக்கு ஆதரவு வழங்கிய யாவர்க்கும்
நன்றி கூறி
தொடர்ந்தும் உங்கள் ஆதரவை
நாடுகின்றோம்.

சுகாதார உத்தரவாதமுடன்

★ சுவைமிகு உணவு, பான வகைகள்.
★ குளிர்களி வகைகள்.

வழங்குநர்கள்

★ **சுவையருவி** ★

லெப். கேணல் இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-9665)

சிந்தனைக்கு

எண்ணியார் எண்ணம் இழப்பர் - இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

- திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 15-06-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண். 05

# புலிகளின் தாக்குதலும் புதிய சிக்கல்களும்

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் சிறிது அதிகரித்த போக்கு அண்மைக் காலத்தில் காணப்படுகின்றது. கடந்தகாலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களுடன் இவை ஒப்பிடப்படுகையில் சிறியவையாக இருப்பினும் அவை இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் கணிசமான முக்கியத்துவம் கொண்டவை. அரசாங்கத் தரப்பிலும், இராணுவத் தரப்பிலும் குழப்பத்தையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

கிழக்கு மாகாணம் இராணுவத்தின் பூரண கட்டுப்பாடு உள்ள பகுதி என அரசாங்கத்தினாலும் இராணுவத் தரப்பினாலும் அடிக்கடி கூறப்படுவதுண்டு. இந் நிலையில் அம் மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையானது அவர்களின் கூற்றுக்கள் குறித்து கேள்வியை எழுப்புகின்றன.

அத்தோடு, கிழக்கு வெற்றி கொள்ளப்பட்டு விட்டதெனக் கூறி வடக்கில் தாக்குதல்களுக்கு தயாரிப்புக்களை மேற்கொண்டுவந்த இராணுவத்தின் முன்னும், அரசாங்கத்தின் முன்னும் எழுந்துள்ள முக்கிய பிரச்சினையாக கைப்பற்றிய பிரதேசத்தைப் பாதுகாப்பதா? அன்றி புதிய தாக்குதல்களை ஆரம்பிப்பதா என்பதாக மாறிவிட்டது.

இதுவே கிழக்கில் இருந்து வடக்கிற்கு நகர்த்திய படைகளை - சுமார் 12,000 துருப்புக்கள் - மீளவும் கிழக்கிற்கு பெறுவது குறித்து பாதுகாப்பு அமைச்சும், இராணுவத் தலைமையும் நடத்திவரும் பேச்சாகும். இது,

# இராணுவ நிலை மீது மோட்டார் தாக்குதல்

மாதகல் பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவ நிலைகள் மீது கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலையும் றொக்கற் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

# எறிகணை தாக்குதல்களுக்கு நற்சமூகநிலையம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக மண்டைதீவு, காரைநகர், பலாலி இராணுவ முகாம்களிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புகள் நோக்கி படையினர் நடத்தும் கண்முடித்தனமான எறிகணை தாக்குதலை கண்டித்து நற்சமூக நடு நிலைய இயக்குனர் வண. டாக்டர் எஸ். ஜே. இமானுவல் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அப்பாவி பொதுமக்கள் மீது அரச பயங்கரவாதம் இந்த வாரம் முதல் மீள ஆரம்பித்து விட்டது போல் தோன்றுகிறது. நாட்டினதும் உதவி வழங்கும் நாடுகளினதும் நிதி உதவியில் தங்கியிருக்கும் உங்கள் படையினர் இரவும் பகலும் எறிகணைகளை எவ்வித இலக்குமின்றி பொதுமக்கள் மீது ஏவுவதற்கு என்ன காரணம்?

இத்தகைய மோசமான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு கேட்கின்றோம். உங்களின் அரசியல் வங்குரோத்தும் யுத்த நிறுத்தம் சமரசப் பேச்சுகள் மூலம் பிரச்சினையை தீர்க்கும் நல்லெண்ணமும் இல்லாமை இதன் மூலம் காட்டப்படுவது வெட்கக் கேடானது எனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த வலுக்குறைந்தோர் புனர்வாழ்வுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைவர் அறிவித்துள்ளார்.

## கணிதக் கருத்தரங்கு திகதி மாற்றம்

1994 ஆம் ஆண்டு இரண்டாம் தடவையாக க. பொ.

## பல்லாயிரக்

...கில் வைக்கப்பட்ட இப் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று அதிகாலை முதல் மக்கள் கூட்டம் திரள் திரளாக பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தது. காலை 9.25 மணிவரையும் தொடர்ச்சியாக பல நூற்றுக்கணக்கான மக்கள் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வைக்கப்பட்டிருந்த பேராசிரியரது பூதவுடலைத்தாங்கிய பேழையை பல்கலைக்கழகத்தின் மூத்த கல்விமான்கள் தமது தோள்களில் தாங்கியவாறு மண்டபத்தில் இருந்து வெளியேறினர். இப்பேழைக்கு முன்னால் மலர் வளையங்களைத் தாங்கிய மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர். இவ்வாறு பரமேஸ்வராச் சந்திவரை ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட இப் பேழை 9.45 மணியளவில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மற்றும் திரு. புதுவை ரத்தினதுரை, திரு. இளங்குமரன் உட்படப் பல உறுப்பினர்கள்

# வளமான வாழ்வுக்கு வழிதேடு பெண் தருகின்ற சீதனம் பெருங்கேடு

வரும் ஜனாதிபதி தேர்தலில்

# ஜே. வி. பி. சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கு பூரண பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுன தனது அபேட்சகர் ஒருவரை நியமனம் செய்யுமானால் அந்தக் கட்சி பதிவு செய்யப்பட்டதாக இருப்பதனால் அவ்வேட்பாளருக்குப் பாதுகாப்பு வழங்குவதென அரசாங்கமும் பாதுகாப்பு அதிகாரிகளும் முடிவு செய்துள்ளனர்.

ஜே. வி. பியினர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு அபேட்சகரை நியமனம் செய்யப் போவதாக அதன் பொதுச் செயலாளர் சோமவன்ச அமரசிங்க பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜே. வி. பியினர் ஜனாதிபதி வேட்பாளராக இதுவரைஎவரின் பெயரையும் பிரேரிக்கவில்லை என தெரிய வருகிறது. சோமவன்ச அமரசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையின் தெற்கு கரையோரத்தில் புலிகளின் ஆயுதக் கப்பல் தரிப்பு?

(கொழும்பு)

இலங்கையின் தெற்கு கரையோரப் பகுதியில் பாரிய கப்பல் ஒன்று நங்கூரமிட்டு நிற்பதாகவும் இக்கப்பல் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை எடுத்து வந்திருக்கலாம் என நம்பப்படுவதாகவும் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது பற்றி நடத்தப்பட்ட பூர்வாங்க விசாரணையிலிருந்து இக்கப்பல் இம்மாதம் முதலாம் திகதி முதல் அம்பாந்தோட்டைக்கு தென்புறமாக கடலில் நிற்பதாகவும் இக்கப்பல் பர்மாவிலிருந்து வந்ததாகவும் இக்கப்பலின் கப்டன் பர்மாவைச் சேர்ந்தவர்எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. கப்பலில் இந்தோனேசியர்களும் பர்மியர்களும் பணிபுரிகின்றனர் கப்பலின் பெயர் கேமேடெல்லா என அறிவிக்கப்படுகிறது.

பர்மாவில் இருந்து இலங்கைக்கு கப்பலொன்று நான்கு நாட்களில் வர முடியும். ஆனால் இக்கப்பல் இங்கு வர 14 நாட்கள் எடுத்துள்ளமை குறித்தே சந்தேகம் எழுவதாக கூறப்படுகின்றது.

## அரச

இதேவேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காரைநகர் பகுதியில் பாதுகாப்பு பிரதேசத்தினுள் ஊடுருவல் செய்த புலிகள் அங்கு கடற்படையினரில் நால்வரை சுட்டுக் கொன்றிருப்பதை பாதுகாப்பு அமைச்சு ஊர்ஜி

# எறிகணைத் தாக்குதல் கொழும்புக்கு அறிவிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிறிலங்காவின் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது மேற்கொண்டு வரும் எறிகணைத் தாக்குதல் மற்றும் குண்டு வீச்சுக்கள் தொடர்பாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் கொழும்புக்கு வானொலிச் செய்தி அனுப்பியிருப்பதாக யாழ்ப்பாண வதிவிடப் பிரதிநிதி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இச் செய்தியில் அண்மையில் இந்தியாவிலிருந்து திரும்பிய இருவர் காயமடைந்து இருப்பது குறித்தும், அரசசார்பற்ற நிறுவனமொன்றின் அலுவலகம் சேதமடைந்திருப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

படுகொலைகளை மேற்கொண்ட இராணுவம்

# சம்பிரதாயபூர்வ படையா? பிரமுகர் குழு கண்டனம்

சிறீலங்கா இராணுவம் 1983 வரை சம்பிரதாயபூர் ... த்தும் ஆயிரக் கணக்கானோ ...

னையாக கைப்பற்றிய பிரதேசத்தைப் பாதுகாப்பதா? அன்றி புதிய தாக்குதல்களை ஆரம்பிப்பதா என்பதாக மாறிவிட்டது.

இதுவே கிழக்கில் இருந்து வடக்கிற்கு நகர்த்திய படைகளை - சுமார் 12,000 துருப்புக்களை - மீளவும் கிழக்கிற்கு பெறுவது குறித்து பாதுகாப்பு அமைச்சும், இராணுவத் தலைமையும் நடத்திவரும் பேச்சாகும். இது, கிழக்கில் புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க மேலதிக படைகள் தேவை என்பதைக் காட்டுவதோடு கிழக்கு இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும் காட்டுவதாகவுள்ளது.

இதேசமயம், கிழக்கில் கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் போன்ற பாணியில் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்திவிடலாம் என்றே அரசாங்கத் தரப்பு கருதியிருந்தது. ஆனால், புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் போக்கானது அரசியல் ரீதியாக அரசாங்கத்திற்குப் புதிய சிக்கல்களை தோற்றுவிக்கும் கட்டத்தை அடைந்துள்ளது. அடுத்ததொரு தேர்தலை நடத்த முடியுமா என்ற சந்தேகத்தையும் கொடுத்துள்ளது.

இவை தவிர வடக்கிலும் புலிகள் அண்மையில் மேற்கொண்ட தாக்குதல்கள் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள்ளேயே பெருமளவில் இடம்பெற்றுள்ளது. இதில், மன்னார்த் தீவினுள்ளும், காரைநகர் தீவினுள்ளும் புலிகள் நடத்திய ஒன்றிற்கு மேற்பட்ட தாக்குதல்கள் இராணுவத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டிய அவசியத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

விடுதலைப் புலிகள் கடந்த காலத்திலும் இவ்வாறான தாக்குதல்கள் பலவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர். இவ்வாறான தாக்குதல்கள் ஒவ்வொன்றும் இடம்பெறும் போதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இராணுவம் மாற்றியமைப்பதும், படைகளை உசார் நிலையில் வைத்திருப்பதும் வழமையாகும் ஆயினும்,தாக்குதல்கள் தொடர்வதை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

கடலால் சூழப்பட்ட தீவுகளில் கூட இராணுவத்தினரது பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி புலிகளால் உட்புக முடிந்துள்ளது. இந்நிலையில், வடக்கில் பெரும் நிலப் பகுதிகளைப் பாதுகாத்தல் தொடர்பான இராணுவத்தின் யுக்திகளும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன என்பதே உண்மையாகும்.

இந்த வகையில், இராணுவமும் - பாதுகாப்பு அமைச்சும்,இத் தாக்குதல்கள் குறித்து தீவிரகவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவை புதிய இடங்களைக் கைப்பற்றுதலா? அல்லது பழைய இடங்களைப் பாதுகாத்தலா என்பதில் எது முக்கியத்துவம் என்பதையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்து புதியஇடங்களைப் பிடித்தல் தேர்தல் பிரசாரத்திற்கு அவசியமானதாயினும் பிடித்தஇடங்களில் தாக்குதல்களை எதிர்நோக்குவதென்பது அரசுக்கு புதிய நெருக்கடிகளையும், இராணுவத்திற்கு இழப்பையும் சலிப்பையுமேற்படுத்தக் கூடியவை என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு இராணுவவேலி புலிகளின் தாக்குதல்களுக்கு தடைபோட்டு விடக் கூடியவை அல்ல என்பதையும் இத்தாக்குதல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

துள்ளார்.

## கணிதக் கருத்தரங்கு திகதி மாற்றம்

1994 ஆம் ஆண்டு இரண்டாம் தடவையாக க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவிருந்த கணிதக் கருத்தரங்கு, பேராசிரியர் திரு. அ. துரைராசா அவர்களின் மறைவையொட்டி, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது,

## மக்கள்

அவர்கள் இந்த மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். மனித நேயம் அவரை மக்களோடு இறுகப் பிணைத்தது. மக்களோடு இணைந்து நின்று, மக்களின் துயரச் சிலுவையைத் தானும் சுமந்து கொண்டார். மக்களின் போர்க்கால வாழ்வனுபவத்தைத் தானும் பகிர்ந்து கொண்டார்.

எமதுமக்கள் உரிமைபெற்று வாழவேண்டும். தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் தகைமைபெற்று வாழ வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக நின்றார். அதற்காகக் குரல் எழுப்பவும் அவர் தயங்கவில்லை.

இப்படியான ஒரு மாமனிதரைப் பிரிந்து, துயரக் கண்ணீர் வடித்து நிற்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

## இறுதி

அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதி, செல்வி பேர்கின்ஸ், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் ஆகியோரும் அஞ்சலிசெலுத்தினர்.

மேலும் அஞ்சலி செலுத்துவதற்கு பெருமளவு மாணவரும் மக்களும் மிக நீண்டவரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

## பான்ட்

அப்போது வீதியின் இருமருங்கிலும் பாடசாலை மாணவர்கள் அணி வகுத்து நின்று ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட பேராசிரியரின் பூதவுடலுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்

வில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மற்றும் திரு. புதுவை ரத்தினதுரை, திரு. இளங்குமரன் உட்படப் பல உறுப்பினர்கள் பேராசிரியரின் பூதவுடல் தாங்கிய பேழையை கையேற்றுக் கொண்டனர்.

இவ்வாறு கையேற்கப்பட்ட பின்னர் தமிழீழ வரைபடத்தை முகப்புத் தோற்றமாகக் கொண்ட, விசேடமாக அமைக்கப்பட்ட ஊர்தியில் இப்பேழை வைக்கப்பட்டு தொடர்ந்து ஊர்வலம் நகர்ந்தது.

பலாலி வீதியூடாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்த இவ் ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியூடாகவும் பின்னர் கண்டி வீதியூடாகவும் இவ் ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. யாழ். அரச செயலகம் உட்பட இவ் வீதியில் உள்ள அனைத்து அரச, அரசசார்பற்ற அலுவலகங்களின் ஊழியர்களும் இப்பகுதிப் பொதுமக்களும் வீதிக்கு வந்து மலர்கள் சொரிந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

தொடர்ந்து இவ் ஊர்வலம் கண்டி வீதியூடாக தென்மராட்சியை நோக்கிச் சென்றது. இங்கும் வீதிகளில் திரண்டிருந்தமாணவர்களும் பொதுமக்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர். இவ்வாறு கொடிகாமம் சந்திவரை சென்ற இவ்வூர்வலம் பின்னர் மீண்டும் திரும்பிவந்து புத்தூர் சந்தியூடாக கனகம் புளியடி, கப்புத்து வீதியூடாக மந்திகையை அடைந்தது. மந்திகையில் இருந்து நெல்லியடிச் சந்தியூடாகச் சென்று வதிரியில் அமைந்திருக்கும் பேராசிரியரது இல்லத்தை அடைந்தது.

பேராசிரியரது பூதவுடலைத் தாங்கிய பேழை அவரது இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டபோது நேரம் மாலை 3.15 ஆக இருந்தது பல்கலைக்கழக கொடியால் போர்க்கப்பட்டிருந்த பேராசிரியரது பூதவுடலைக் கண்டதும் இல்லத்தில் குழுமியிருந்த அவரது உற்றார், உறவினர்களுடன் சேர்ந்து பொதுமக்கள் பலரும் வாய்விட்டுக் கதறி தமது தாளாத துக்கத்தை வெளிக்காட்டினர்.

நேற்று மாலை முதல் பல நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு வந்தவண்ணமிருந்தனர். (க) (நி) (யோ)

இதேவேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காரைநகர் பகுதியில் பாதுகாப்பு பிரதேசத்தினுள் ஊடுருவல் செய்த புலிகள் அங்கு கடற்படையினரில் நால்வரை சுட்டுக் கொன்றிருப்பதை பாதுகாப்பு அமைச்சு ஊர்ஜிதம் செய்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்தப்பட்ட இத் தாக்குதலில் இளம் உதவி லெப்ரினன்ட் தர அதிகாரி ,ஒருவரும் உயிரிழந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் மேலும் கூறப்படுகிறது. கடற்படையினரில் ஆறுபேரும், இராணுவத் தரப்பில் நான்கு பேரும் காயமடைந்த இத்தாக்குதல் புலிகள் தரப்பிலிருந்துமேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலாக கருதப்படுவதாகவும் கூறப்படுகிறது.

காரைநகர் பகுதியில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும், படையினர் தரப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## துணைப்படை

ஏற்பட்ட நேரடி மோதலில் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த துணைப் படை வீரர் வீரவேங்கை சாம்பசிவம் (சண்முகம் சாம்பசிவம், ஒதியமலை, தற்போதைய இடம்: சேனைப்புலவு) என்பவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இம்மோதலின் போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

வீரச்சாவடைந்த இவரின் புகழுடல் நேற்று முன்தினம் 2.30 மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 5 மணியளவில் முள்ளியவளை மாவீரர் அஞ்சலி மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இவ் அஞ்சலி நிகழ்வில் முல்லைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. குணாளன், முல்லை மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மயூரி ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இம் மாவீரருக்கு பெருந்திரளான மக்கள் மலர்களும் மாலைகளும்இட்டு அஞ்சலிசெலுத்தினர்.பின்னர் இவரது புகழுடல் துணைப்படை வீரர்களின் ''பான்ட்'' வாத்திய இசையுடனும் இராணுவ மரியாதைகளுடனும் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

படுகொலைகளை மேற்கொண்டஇராணுவம்

## சம்பிரதாயபூர்வ படையா? பிரமுகர் குழு கண்டனம்

சிறீலங்கா இராணுவம் 1983 வரை சம்பிரதாயபூர்வமாக ஒன்றாகவே இருந்தது என்று மேல்மாகாண முதல்வரும், சுதந்திரக் கட்சி பிரதி தலைவருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியிருப்பதை சிறிலங்காவின் வெளிநாட்டிலுள்ள பிரமுகர் குழு கண்டனம் செய்துள்ளது.

இது தொடர்பாக இக் குழு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்தும் ஆயிரக் கணக்கானோரை காயப்படுத்தியும், வந்துள்ள சிறிலங்கா இராணுவம் வெறுமனே சம்பிரதாய பூர்வமானது என்று கூறியிருப்பதை ஏற்க முடியாதென்றும் தெரிவித்துள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 06. 15 புதன் இரவு

08.01 - பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவையொட்டி சிறப்பு -நிகழ்ச்சி
08.20 - ஏர்முனை'' நிலம் பண்படுத்துதல்'' கேள்வி பதில்
08.30 - செய்திகள்
08.40 - நாடகம் புதிய யதார்த்தம்

### 1994. 06. 16 வியாழன் காலை

07.02 - மாவீர வணக்கம்
07.15 - விடுதலை கீதங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - விடுதலை கீதங்கள்நிகழ்ச்சியின்தொடர்ச்சி

## காமினி

மூவருக்கும் வழங்கப்படும் என இதுவரை கூறப்படவில்லை. எனக்கு நிதி அமைச்சர் பதவி கிடையாதுஅப்பதவியைஜனாதிபதியே தொடர்ந்து வகிப்பார் என்றும் புதிய பொறுப்பு என்ன என்றும் தமக்குத் தெரியாது என ரொனி டிமெல் கூறியுள்ளார். எனக்கு அமைச்சர் பதவி கிடைக்குமா கிடைக்காதா என்பது தெரியாது என காமினி ஜெயவிக்கிரம பெரேரா கூறினார்.

இதே வேளை ரொனி டிமெல்லுக்கு நிதி அமைச்சர் பதவிக்குப் பதிலாக துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சு வழங்கப்படலாம் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## போக்குவரத்து ஒழுங்குகள்

மறைந்த முன்னாள் துணைவேந்தரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் அனைத்துபீட மாணவர்களுக்கும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அனைத்து மாணவர்களையும் இன்று காலை 7.30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் கூடுமாறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## மேலும் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவம் கொழும்புத்துறை நோக்கி நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் நேற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் எஸ். பரமேஸ்வரி (வயது 55, எனத் தெரியவந்துள்ளது. இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச, சி,

## வீரவணக்க கூட்டம்

கடற்புலிகளின் யாழ். மாவட்ட பிரதேசங்களில் 5ம் 6ம் மாதங்களில் நினைவு கூரப்படும் மாவீரர்களின் வீரவணக்க கூட்டத்தில் இன்று வடமராட்சி கோட்டம் கிழக்கு வட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் மாலை 7-00 மணிக்கு குடத்தனை வடக்கு மைதானத்தில் நடைபெறும்.

## மனிதம் ஒன்று மரணித்ததோ?



திறமையொடு, தகைமைமிகு செயல்வீர,
தமிழெனும் தேசஅபிமான கொண்டோன்
அறிவொளி அமைதிவிழி, அகிலம் புகழ்
பெருமகனை அடங்கி விட புவி தாங்குமோ?

**பேராசிரியர் - அ. துரைராசா**

**அவர்களின் மறைவினால் துயருறும்**
**அவர்தம் குடும்பத்தாருக்கு எமது**
**ஆழ்ந்த அனுதாபங்கள்**

கல்வி அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
வேலணை / ஊர்காவற்றுறைக்
கல்விக் கோட்டம்.

(8566)

## முன்னாள் யாழ் பல்கலைக் கழக

**உபவேந்தர் பேராசிரியர்**

**அ. துரைராசா அவர்களுக்கு**

## இதயாஞ்சலிகள்

ஏடிலங்க ஏரிலங்க ஏழிசை தமிழிலங்க
சீரிலங்க செந்தமிழீழ மக்களுக்கு
சேர்த்திட்ட சேவையினால் காலத்தால் அழியாத
காவலனாய் நற்றவனாய் நல்பேராசானாய் நானில
மெங்கும்
இடங் கொண்ட நாயகனே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் இதயாஞ்சலிகள்

## எம் இதய அஞ்சலி

**இந்த நாட்டை நேசித்த பெருந்தகை**
**பேராசிரியர் அ. துரைராசா**



"துறந்தார் பெருமை துணை கூறின் - வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

இந்த மண்ணின் விடிவுக்காய் தன்னை அர்ப்பணித்தவரான முன்னாள் துணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் பிரிவு இந்த நாட்டை உலுக்கியுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகளில் ஆழமாக ஈடுபட்டு அரும்பாடுபட்டவர். எம் போராட்ட வரலாற்றில் போராட்டத்துடன் இணையாமல் ஒதுங்கி பார்வையாளராக நின்றவர்களும் உண்டு. ஆனால் துணைவேந்தரோ போராட்ட நடவடிக்கைகளுக்கும் அதனோடு தொடர்பான பொருண்மிய வளர்ச்சிக்கும் பெரும் துணை நின்றதோடு பொருண்மிய பணிகளுக்கு யாழ். பல்கலைக்கழகத்தை பெருமளவிற்கு இணைத்தவர்.

இந்த மண் விடுதலை பெறும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர் என்ற காரணத்தால் இந்த மண்ணினதும் மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார். போராட்ட வாழ்வின் பளுவை சுமந்துகொண்டார். எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப்பற்றி நின்ற அவர் எமது தமிழீழத் தேசியத் தலைவரினால் கௌரவிக்கப்பட்டார். பொருண்மிய வளர்ச்சிக்குத் தேவையான சகல துறைசார் நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்ள ஓர் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர். நோயுற்ற தனது இறுதிக் காலங்களில்கூட நாட்டின் பொருண்மிய மூலம் நாட்டுக்காக சிந்தித்துக் கடுமையாக உழைத்த ஒரு பெருந்தகை ஆவார்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

15 - 6 - 94

(சி-9696)

## நெஞ்சுடைந்தோம் ஐயா!

**அமரர் பேராசிரியர் அ. துரைராசா**

பல்கலைக் கழகமென்றால்
பட்டங்கள் வாங்குவோரின்

## கண்ணீர் அஞ்சலி

**பேராசிரியர்**
**அழகையா**
**துரைராசா**

இம்மண்ணில் பிறந்து வளர்ந்து, மண்ணை நேசித்து, இம் மண்ணிற்கே தன்னை ஒறுத்து அரும் பெரும் சேவையாற்றி தன்னுயிரை அர்ப்பணித்த பேராசான். அன்னாரை இழந்து கல்வி உலகம் கலங்கி நிற்கும் இவ்வேளையில், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்,
பா. அ. சங்கம்,
ப. மா. சங்கம்,
யா / ஞானாசாரியர் கல்லூரி,
கரவெட்டி.

(சி-9803)

யாழ் / பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்
பேராசான்

## அழகையா
## துரைராசா

மறைவுக்கு

**கண்ணீர் அஞ்சலி**

சமுதாயம் அல்லலுறும்
வேளை வாழ்ந்தாய்
அது ஆற்ற பிரசை
குழுவில் உழைத்தாய்
அதன் உச்சக் கல்விமன்றில்
தலைவனாகி
நிதம் எளிமையாய்
நடந்து வழிகாட்டினாய்.
மண்ணியலில் 'துரை
காண்டு' மூலமிங்கு
முத்திரை இத்தரையில்
பதித்து வைத்தாய்
சமுதாயம் வாழ்வதற்கு
மூலிகை தந்தாய்
எம்மனத்தில் துயர அலை
எழுப்பி நின்றாய்.

நினக்கு இதயஞ்சலி
கோடியையா

**சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)**
**சுன்னாகம்.**

தமிழீழத்தின் சிறந்த கல்விமானும்,
முன்னாள் பொறியியல் பீடப் பீடாதிபதியும்,
யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும்,
எமது மண்ணின் மாண்புமிகு கல்விக்கு
உந்து சக்தியாக விளங்கியவருமாகிய,
அமரத்துவம் எய்திவிட்ட,

பேராசிரியர்

## அழகையா துரைராசா

அவர்கட்கு
எமது இதய அஞ்சலிகளைச் செலுத்திக் கொள்கின்றோம்

**பணிப்பாளர்களும்,**
**பணியாளர்களும்.**

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
15-06-94

(சி-9693)

## இதய ஆராதனை

பட்டப் படிப்புகள் கல்லூரி
**அமரர் பேராசிரியர்**
**அ. துரைராசா அவர்களுக்கு.**

கசடறக் கற்றவரே கற்றவழி நின்றவரே
பேரறிவுப் பெட்டகமே பேராசிரியப் பெருந்தகையே
மாசிலாக் குணநலத்தால் குன்றென உயர்ந்தவரே
தேசமெலாம் புகழ் நிலைக்க வித்தூன்றி விட்டீரே
உன்நாமம் அழியாது உயிருள்ளோர் வாழும் வரை.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**மாணவர்கள், ஆசிரியர்கள்,**
**இயக்குனர்**

(சி-9394)

**அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**(வரையறுக்கப்பட்டது)**

## விசேட பொதுக் கூட்டம் 15-06 1994

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தினால் 15-6-94 ஆம் திகதி காலை 10மணிக்கு நடைபெற இருந்த விசேட பொதுக் கூட்டம் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் அ. துரைராசா அவர்களின் இறுதி நாள் துக்க தின நிகழ்ச்சி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்

சிறிலங்க செந்தமிழ மக்களுக்கு
சேர்த்திட்ட சேவையினால் காலத்தால் அழியாத
காவலனாய் நற்றவனாய் நல்பேராசானாய் நானில
மெங்கும்
இடங் கொண்ட நாயகனே!

உங்கள் ஆத்மா சந்தியடைய
எங்கள் இதயாஞ்சலிகள்

தொழிலாளர் கல்விக் கழகம்
யாழ். பல்கலைக் கழகம்
(8561)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர் அமரர்
பேராசிரியர்

## அழகையா துரைராசா

அவர்களின் பிரிவாற்றாமல்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்
பேரவையினர் வழங்கும் இரங்கல்

| தாயக மண்ணில்: | சாவெனும் துயிலில்: |
|---|---|
| 10-11-1934 | 11-06-1994 |

பல்கலைக்குத் துணைவேந்தர்
பைந்தமிழர் கல்விக்கு
பயன் தந்த பெருவேந்தர்
சொல் செயலில் எண்ணத்தில்
தூயபணி தலைக்கொண்டு
துயர்துடைத்த துரைவேந்தர்
எல்லோரின் உள்ளத்தும்
இடம்பிடித்து நலம் செய்த
இணையில்லாத் தனிவேந்தர்

வல்லோராய் மாணவர்கள்
வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிசமைத்த உயர்வேந்தர்
இவர்பிரிவு எமக்கிழப்பு
இவர் பிரிவு மீட்பரிது
இவர் பிரிவு துயர் பெரிது
அவர் வழியில் நாம் கற்போம்
அவர் நெறியில் நிதம் வாழ்வோம்
அவர் பணியில் நாம் வெல்வோம்,

துணைவனின் இழப்பினால் துயருறும் மனைவியும்,
நினைவினில் உருகிடும் மைந்தரும் மக்களும்
அனைவரும் துயரினை ஆற்றியே அமைகவே!

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர்

(சி-9801)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## நெஞ்சுடைந்தோம் ஐயா!

அமரர் பேராசிரியர் அ. துரைராசா

பல்கலைக் கழக மென்றால்
பட்டங்கள் வாங்குவோரின்
கொள்கலன்! அவருரைக்கும்
கொள்கையே வேதமென்று;
குடிமக்கள் எந்த நாளும்
கூப்பிட்டு ஏற்க வேண்டுமெனும்
கொள்கையைத் தகர்த் தெறிந்த
கோமகனே எங்கு போனாய்?

நாட்டுப் பற்றாள்ளென
நடை பயின்ற 'நெடுந்தென்றல்'
நேற்றோடு வீசாமல்
நின்று விட நெஞ்சுடைந்தோம்!

- வட மாகாண ஒப்பந்தகாரர் சங்கம்

(சி-9680)

---

## 2.ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்;
1971 - 6 - 10

தாயக மண்ணில்:
1992 - 6 - 15

2ஆம் லெப். செம்பியன் / சுபாஸ்
பிரான்சிஸ் றொபின்சன்
(புங்குடுதீவு 10-ம் வட்டாரம்)

தலைவனின் வளர்ப்பில் பண்பாக வளர்ந்தாய்
எதிரியின் பாசறை அழித்திட விரைந்தாய்
கொட்டும் குண்டு மழையில்
தமிழீழ விடுதலைக்காய் தளைத்தாய்
நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தாய்
கல்லறைக்குள் உறங்கும் காவியப் புலியே
உன் உடல் மட்டும் தான் தூங்குகிறதே அன்றி
உன் இலட்சியக் கனவுகள் தூங்கவில்லை

உன்பிரிவால் துயருறும்

தற்காலிக முகவரி:
சீலன்நகர் நாவற்குழி,
வீட்டுத்திட்டம்.
D 152,

அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார் மற்றும்,
உற்றார், உறவினா.

(8570)

---

முத்திரை இத்தரையில்
பதித்து வைத்தாய்
சமுதாயம் வாழ்வதற்கு
மூலிகை தந்தாய்
எம்மனத்தில் துயர அலை
எழுப்பி நின்றாய்.

நினக்கு இதயஞ்சலி
கோடியையா

பிரதிக் கல்விப்பணிப்பாளர், அலுவலர், அதிபர், மாணவர்.

கல்விக்கோட்டம்,
கரவெட்டி. (சி-9804)

---

## கண்ணீர் அஞ்சலிகள்

தமிழீழ மண்ணுக்காக இரவு, பகல் பாராது மக்கள் மனம் கவர்ந்த கல்விமான், பேராசான் அ. துரைராசா அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் துரைராசா அவர்களின்மறைவையொட்டி இன்று பூரண கதவடைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது ஆகையால் எமது சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் யாவையும் கதவடைப்புச் செய்து பேராசான் துரைராசா அவர்களுக்கு பூரண அஞ்சலியை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சுன்னாகம்
வர்த்தக சங்கம்

(சி.9802)

---

யாழ். ஶ்ரீதரில்
புரூஸ்லி நடித்த
GAME OF DEATH
தினசரி
பிற்பகல் 4.00மணி 6.00மணி
சனி, ஞாயிறு
காலை 10. 30 மணி
பிற்பகல் 4.00 மணி 6.00மணி
(சி- 9570)

---

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தினால் 15-6-94 ஆம் திகதி காலை 10மணிக்கு நடைபெற இருந்த விசேட பொதுக் கூட்டம் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் அ. துரைராசா அவர்களின் இறுதி நாள் துக்க தின நிகழ்ச்சி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. ச.
மருதனாமடம்.

14-6-94

(சி-9697)

---

## கண்ணீர் அஞ்சலி

பொதுப் பணிக்கு அயராது உழைத்த
பேராசிரியர் அ. துரைராசா அவர்கட்கு
எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம

யாழ். நாயன்மார்கட்டு
சனசமூக நிலையம்

(சி-9695)

---

இறைவனடியில்
## நீவிர் நீடூழி வாழ்வீர்...



அன்னை மடியில்
30 - 09 - 1920

ஆண்டவன் நிழலில்
15 - 06 - 1990

இறப்பியேல் யோசவ் /
பொன்னுத்துரை
(இளைப்பாறிய யாழ். மாநகரசபை சிறாப்பர்)

நான்காண்டு கணப்பொழுதாய் கரைந்ததையா
நீராடும் கண்கள் தனில் மனக்குமுறல் சேர
பேரொளியே! நின் நினைவு முகம் தனை மறவோம்
இறைவனடியில் நீவிர் நீடூழி வாழ்வீர்.

சோகச்சுமையுடன்

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

19/8, மடம் தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9691)